## 1.1 பாதகமான அபிப்பிராயம்

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் (எதிர்காலத்தில் நட்ட மீளளிப்புக்கான அலுவலகத்திற்கான மாற்றீடாக) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உண்மையானதும் நியாயமானதுமான நிலமைகளை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையயின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 3 வாகனங்களின் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய பெறுமதி ரூபா | கடந்த வருடங்களில் முன்கொண்டுவரப்பட்ட சொத்துக்களின் மீதிகளின் அடிப்படையில் குறித்த | சரியான பெறுமதிகளை கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 420,703 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 01-12 மூலம் முன்வைக்கப்பட்டிருந்த நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பான குறிப்பில் அந்த பெறுமதி ரூபா 239,059 ஆக பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. | பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றேன். | |
| (ii) | சரியான கணக்கீட்டு கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தாது 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,375,312 ஆன கடன்மீதிக்கான நூற்றுக்கு நூறு வீத ஐயக்கடன் ஒதுக்கீடொன்று மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் காரணமாக ஐயக்கடனுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இந்தக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | முறையான கணக்கீட்டு கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படாத அரச வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்று 2013 யூன் 12 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் இந்த சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,368,152,204 ஆன தொகை மற்றும் சேமிப்புக் கணக்கில் மீளப் பெறப்பட்ட ரூபா 1,258,743,823 ஆன தொகை காசுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய சேமிப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறன மீதி ரூபா 239,021,499 தொகை | இறுதிக் கணக்கில் பக்க இலக்கம் 39 இல் 2.8.2 பிரிவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தவாறு சேமிப்புக் கணக்கின் கணக்கினை ஆரம்பிக்கும் போது அதன் மூலம் ஈட்டப்படும் வட்டி நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு உரிய அங்கீகாரம் அமைச்சின செயலாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தவறுதலொன்றினால் இந்த சேமிப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி கணக்குத் தொகுதியில் வெளிப்படுத்த | உரிய அதிகாரத்துடன் நிதி கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அனைத்து சொத்துக்களும் வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| அதிகாரசபையின் நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முடியாதிருந்தது. எதிர்காலத்தில் அந்த உரிமைப்பாட்டினை தவிர்ப்பதற்கு கவனத்துடன் செயற்படுவதாக அறிவிக்கின்றேன். |

### 1.5.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை<br>ரூபா | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 20,987,891 | நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 சொத்துத் தொகுதிகளின் பட்டோலைகள். | பட்டோலைகளை சமர்ப்பிக்கின்றேன். | சொத்துக்கள் வெவ்வேறான இனங்காணக்கூடிய வகையில் நிறைவானதாக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நபரொருவருக்கு ரூபா 200,000 படியான வியாபாரக் கடன் முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகுதியில் 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாது காணப்படும் ரூபா 4,375,312 ஆன கடன் மீதியினை அறவிடுவதற்காக அதிகாரசபையினால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கடன் உத்தேச முறைமையின் கீழ் கடன் பணத்தை வழங்கும் போது பலனாளியொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 4,800,000 ஆன கடன்மீதி உள்ளடங்களாக 41 நலனாளிகளுக்கு ரூபா 200,000 ஆன எல்லையினை மிகைத்து ரூபா 11,556,222 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | இந்தக் கடன் முறைமை திட்டமிடப்பட்டிருந்த நட்டத்திற்கு உள்ளாகிய வியாபார அலகொன்றிற்காக ரூபா 200,000 படியாக இருந்ததுடன் அதன்போது சேதத்திற்குள்ளாகிய நபரொருவரின் 24 கடைகளுக்காக ரூபா 4.8 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடனை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது என்பதை அறியத்தருகின்றேன். | கடன் தொகையினை வழங்குதல் மற்றும் அறவிடல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கடன் திட்டங்கள் 1990-1995 காலப்பகுதியினுள் 14 சந்தர்ப்பங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 128,000,000 தொகையில் 2018 சனவரி 01 ஆந் திகதிக்கு மீண்டும் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய முதலீட்டின் பெறுமதி ரூபா 94,715,000 தொகையாகும். அவற்றுள் மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 12,000,000 தொகை அதிகாரசபைக்கு கிடைத்திருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் இந்த முதலீட்டிற்காக 1.5 சதவீதப்படி வட்டி கிடைத்திருக்கவில்லை. கணிப்பீட்டின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 1,337,259 தொகையானது மீளாய்வாண்டிற்குரிய வட்டி மற்றொரு வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் குழுவினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்ததன் பிரகாரம் பெற வேண்டிய வட்டியை பதிவழித்து முதலீட்டுத் தொகையை மாத்திரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. பின்னர் மாதமொன்றிற்கு ரூபா 1,000,000 ஆன தொகை அவர்களுக்கு மீளசெலுத்தும் இயலுமையின் அடிப்படையில் வழங்குவதாக இணங்கியிருந்ததுடன் குறித்த தொகை இதுவரையிலும் அறவிடப்பட்டவாறுள்ளது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்றைப் பின்பற்றி உரிய முறையில் கணக்கு வைக்க வேண்டும். |
| (iii) | 10 – 3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக மேற்கொண்டுவரப்படுகின்ற வைிட்டுச் சென்ற மற்றும் பணி வறிதாக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,157,346 ஆன கடன் மீதியில் நிதிகள் 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதியொன்றின் அறவீடுகள் தொடர்ச்சியாக புறக்கப்பட்டவாறு இருந்தமையால் பிணை வைக்கப்பட்ட ஆதனங்கள் ஏலமிடுவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையும் ஏனைய கடன் மீதியினை அறவிடுவதற்கு இறுதி அறிவித்தலொன்று அனுப்பப்பட்டுள்ளதாக ஆதனங்கள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொண்டு, காணியை ஏலத்தில் விற்பனை செய்யும் வரையில் பிணையாளரிடமிருந்து கடன் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன் | பிணையாளர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 13,133,159 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 4,384,048 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 8,749,111 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏனைய செலவினங்கள் ரூபா 2,710,704 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 வரை ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 189 நலனாளிகளுக்கு கடன் / நட்டஈட்டு தொகையான ரூபா 13,045,339 தொகை செலுத்துவதற்கு வங்கிக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 30 ஆந் திகதி வரையிலும் அந்த பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு நலனாளிகள் வருகை தந்திருக்கவில்லை. நட்டஈட்டினை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கான காரணங்கள் தொடர்பில் அதிகாரசபை தேடிப்பார்த்திருக்கவில்லை. | இந்த தாமதத்தினை குறைத்துக் கொள்வதற்காக நலனாளிகளின் விபரங்கள் பிரதேச செயலாளரிடம் மற்றும் நட்ட மீளளிப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி பெற்றுக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை தடுப்பதற்கும் இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | நட்டஈட்டு தொகையை செலுத்துவது அரச விதிக் கோவைப்படி என்பதால் உரிய முறையில் தெரிவுசெய்யப்பட்ட நலனாளிகளுக்காக நட்டஈட்டுத் தொகை உரிய காலத்தினுள் உரிய பிரமாணங்களுக்கு இணங்கவும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நட்டஈட்டினை செலுத்தும் 4 உத்தேச திட்டங்கள் 23,413 நலனாளிகளுக்கு ரூபா 1,990 மில்லியனான நட்டஈட்டினை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 15,334 நலனாளிகளுக்கு ரூபா 1,246 மில்லியனான நட்டஈட்டு பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமையால் நட்டஈட்டினைச் செலுத்தும் சதவீதம் 63 சதவீதமாக இருந்தது. ஒவ்வொரு நட்டஈடு செலுத்தும் முன்மொழிவு | மீளாய்வாண்டினுள் கிடைத்த கட்டுநிதித் தொகை ரூபா 1,466,700,000 ஆகும். அந்த முழுத்தொகையும் நட்டஈடாக செலுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டினுள் செலுத்துவதற்கு இயலுமையுள்ள நலனாளிகளின் எண்ணிக்கை 16,221 ஆகும். அதில் நிதிசெயல் முன்னேற்றம் 73 சதவீதமாகும். பௌதீக செயல் முன்னேற்றம் 48 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் | திட்டமிடப்பட்டவாறு நட்டஈட்டினை செலுத்துதல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களின் நட்டஈடு செலுத்தும் சதவீதம் 48 முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | அதற்கு காரணமாக 05 நட்டஈட்டு முறைமைகளின் கீழ் பணம் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (iii) | அதிகாரசபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 3 கடன் உத்தேச திட்டங்களின் 3,745 நலனாளிகளுக்கு ரூபா 722 மில்லியன் கடனாக செலுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 985 நலனாளிகளுக்காக ரூபா 213 மில்லியன் கடன் தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமையால்கடன் செலுத்தல் செயன்முன்னேற்றம் 29 சதவீதமாகும். இது ஒவ்வொரு கடன் உத்தேச திட்டங்களின் கடன்செலுத்தல் சதவீதம் 13 முதல் 48 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கடனை விடுவிக்காமைக்கான பிரதான காரணம் பாதுகாப்பான பிணையாளர்களை வழங்காமை, கடனாளிகளுக்கு பல்வேறு நிதி நிறுவனங்களின் கடனாளிகளாக இருந்தமை போன்றவை காரணங்களாக அமைந்திருந்தன. இது தொடர்பில் தொடர்ச்சியாக வங்கியினைப் போன்று கடன் வழங்குனர்களும் தெளிவுபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். | கடன் உத்தேச முறைமை மூலம் வழங்குவதற்கு உத்தேச கடன் முன்மொழிவுத் திட்டத்தின் அமைப்பு குறிப்பீடுகளுக்கு அமைய உரிய காலப்பகுதியினுள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2017 மார்ச் 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2012 நவம்பர் 09 ஆந் திகதி வெலிக்கட சிறைச்சாலை வளாகத்தினுள் ஏற்பட்ட சம்பவத்தின் காரணமாக மரணமடைந்த 16 சிறைக் கைதிகளின் ஒருவருக்கு ரூபா 2,000,000 படி ரூபா 4,000,000 தொகையும் அந்த சம்வத்தில் காயமடைந்த 21 பேரில் 11 பேருக்கு ரூபா 500,000 படி ரூபா 5,500,000 தொகையும் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அந்த நட்டஈட்டுத் தொகையினை செலுத்தியிராததுடன் 2018 மார்ச் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கண்டி திகன பிரதேசத்தில் ஏற்பட்ட மக்களின் கலவர நிலைமை காரணமாக ஏற்பட்ட ஆதனங்களின் சேதங்கள் இடம்பெற்ற 508 சந்தர்ப்பங்களில் 38 | மரணமடைந்த 2 நபர்களுக்காக மற்றும் காயமடைந்த 11 பேருக்காக நட்டஈடு செலுத்துவதற்கு எஞ்சியிருந்ததுடன் மரணமடைந்தவர்களின் தங்கி வாழ்வோர் அல்லது கிட்டிய உறவினர்கள் இல்லாதிருந்தமை மற்றும் வழங்கப்பட்டிருந்த முகவரிகள் தவறானதாக இருந்தமை ஆகியன காரணங்களாக அமைந்தன. நட்டஈட்டினை பெற்றுக் கொள்வதற்காக குறித்த நபர்கள் முன்வந்திருந்தால் எதிர்காலத்தில் உதவி வழங்க முடியும் என குறிப்பிடுகின்றேன். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நட்டஈட்டுத் தொகையினை செலுத்தி அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகை ரூபா 31,695,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த நட்டஈட்டுத் தொகை 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கைத்தொழில் கடன் உத்தேச திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2001 திசெம்பர் 30 ஆந் திகதி இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 தொகை கடன் உத்தேசத்திட்ட முறைமை நடைமுறைப்படுத்தும் காலம் நிறைவடைந்ததன் பின்னர் 2011 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு காலாவதியாகி அதிகாரசபைக்கு மீள்நிரப்புவதற்கு அளிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தொகை அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. அந்த தொகை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் மீண்டும் கடன் உத்தேச முறையை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தொகை 10 ஆண்டுகளில் எமக்கு வழங்க வேண்டியதாக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறித்த கடன் உத்தேச முறைமையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்காக வங்கியுடன் கலந்துரையாடி மீண்டும் அந்த கடன் தொகையை மேலும் 10 வருடங்கள் வங்கியில் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் முதிர்வடைந்த ரூபா 6 மில்லியன் தொகை மீளப் பெறப்படவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். | மீளளிப்பு செய்ய வேண்டிய பெறுவனவுகள் தாமதமின்றி மீளளிப்புச் செய்து உரிய அங்கீகாரத்துடன் மற்றும் முறையான உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திட்டு கடன் உத்தேச முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 1995 - 1990 காலப்பகுதியினுள் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 128 மில்லியன் முதிர்வடைந்து 2006 - 2019 காலப்பகுதியினுள் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 45 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. | அவதானிப்பு சரியானதாகும். வீடமைப்புக் கடன் உத்தேசத் திட்டத்திற்காக இலங்கை வங்கிக்கு பணம் விடுவிக்கப்பட்டது. விண்ணப்பதாரர்களுக்கு வங்கியினால் கடன் பணம் விடுவிக்கும் செயன்முன்னேற்றத்தின் பிரகாரம் என்பதைக் குறிப்பிடுகின்றேன். | பெறவேண்டிய பணம் குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துவதற்கு ஈடுபடுத்த வேண்டிய மூலதன வட்டி ரூபா 21,214,762 தொகை மற்றும் முதலீடுகள் முதிர்வடைந்ததால் கிடைத்திருந்த ரூபா 26,650,000 தொகை உள்ளடங்கலாக ரூபா 55,842,722 ஆன தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அதிகாரசபையினால் எவ்வித பணியிலும் ஈடுபடுத்தாது சுமார் ஒரு வருட காலமாக வங்கிக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | பொருத்தமான செயற்திட்டமொன்றில் முதலீடு செய்யும் வரையில் அதன் பணமானது இவ்வாறு நிறுத்தி வைக்கப்படுவதாக முன்னாள் தலைவரின் எழுத்து மூல அங்கீகாரம் கிடைத்ததுடன் நட்ட மீளளிப்பு அலுவலகத்தினை தாபித்தமையின் பின்னர் புதிய கொள்கைகளை தயாரிக்கும் வரையிலும் குறித்த பணத்தை நிறுத்தி வைக்க நேர்ந்தது. | நிதிச் சொத்துக்கள் நிறுவனத்தின் பணிகளில் இடையூறு விளைவிக்காதவாறு முதலீடுகளில் ஈடுபடுத்தி விளைவற்றுக் காணப்படுவதனை தடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஒக்தோபர் மாதம் 26 ஆந் திகதிய இலக்கம் 34 உடைய நட்ட மீளளிப்புக்கான அலுவலக அதிகாரச்சட்டத்தின் மூலம் 1987 இன் 29 ஆம் இலக்க நபர்கள் ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை மீள்நிர்மாணம் செய்யும் புனரமைக்கும் அதிகாரச்சபை அதிகாரச்சட்டத்தினை அகற்றி நட்டமீளளிப்புக்கான அலுவலகம் தாபிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அகற்றல்கள், சேமிப்புக்கள் மற்றும் இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் நபர்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை புனரமைத்தல் அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நட்டமீளளிப்புக்கான அலுவலகத்திற்கு கையளிக்கும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 நவம்பர் மற்றும் திசெம்பர் | 2018 ஆம் ஆண்டினுள் நட்ட மீளளிப்புக்கான அலுவலகம் தாபிக்கப்படாததுடன் அதற்காக தலைவரொருவர் உள்ளடங்கலாக ஐந்து குழு அங்கத்தவர்கள் பராளுமன்ற அரசியலமைப்புச் சட்டத்தின் சபையினால் நியமிக்கப்படுவது 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி முதலாகும். அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட முடியாமை நட்ட மீளளிப்பு அலுவலகம் தாபிக்கப்படாமையினால் ஆகும். எதிர்காலத்தில் மேற்படி பிரிவின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | கட்டமைத்தல் உருவாக்கப்பட்ட போதிலும் உரிய முறையில் இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு குறித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உரிய முறையில் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாதங்களுக்காக நட்ட மீளளிப்புக்கான அலுவலகத்தின் பெயரில் தனியானதொரு நிதிக்கூற்றுக்களின் தொகுதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிராததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த நிதியாண்டிற்காக ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை புனரமைத்தல் அதிகாரசபை பேரில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.